மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவு, 2019 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(உ) தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு முத்திரைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.